HALF YEARLY EXAM

QUESTION PAPER

ORIGINAL EXAM PAPERS

aglasem.com

B

அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள்:90

பகுதி – I

I சரியான விடையைத் தேர்வு செய்க:– 20x1=20

1. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக _____ இருந்தது.
   அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
   இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்
2. ஆதிச்சநல்லூர் எந்த மாவட்டத்தில் உள்ளது?
   அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்
3. புத்தர் தனது முதல் போதனையை _____ இல் நிகழ்த்தினார்.
   அ) சாஞ்சி ஆ) வாரணாசி இ) சாரநாத் ஈ) லும்பினி
4. _____ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
   அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ராட்சசம்
5. _____ ராஜசூய யாகத்தை நடத்தினார்.
   அ) பெருநற்கிள்ளி ஆ) முதுகுடுமிப் பெருவழுதி
   இ) சிமுகா ஈ) அதியமான்
6. _____ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
   அ) அரிக்காமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்
7. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் _____
   அ) திக்நாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்
8. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
   அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்
9. தேர்ந்தெடுத்து பொருத்துக:
   i) சிம்மவிஷ்ணு – 1. சாளுக்கிய அரசன்
   ii) முதலாம் ஜெயசிம்மன் – 2. பல்லவ அரசன்
   iii) முதலாம் ஆதித்தன் – 3. கப்பல் தளம்
   iv) மாமல்லபுரம் – 4. சோழ அரசன்
   அ) 4 3 1 2 ஆ) 4 1 2 3 இ) 2 1 4 3 ஈ) 4 3 2 1
10. உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோவிலைக் கட்டியவர்கள் _____
    அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் இ) சண்டேளர் ஈ) பரமர்
11. _____ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
    அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்
12. கீழ்கண்டவற்றை கால வரிசைப்படுத்துக.
    அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்
    ஆ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
    இ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
    ஈ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
13. சமண மதத்திலிருந்து போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் _____
    அ) அரி சேனா ஆ) தீர்த்தங்கரர் இ) சிவஞான சித்தியார் ஈ) தர்ம சேனர்
14. கூற்று : பாபர் முதலாம் பானிபட் போரில் வெற்றி பெற்றார்.
    காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.
    அ) கூற்று சரி: காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
    ஆ) கூற்று தவறு : காரணம் சரி
    இ) கூற்று தவறு : காரணம் தவறு
    ஈ) கூற்று சரி : காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

15. மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க _____ இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.
அ) சரஸ்வதி மஹால் ஆ) முக்தாம்பாள் சத்திரம்
இ) நவ வித்யா ஈ) தன்வந்திரி மஹால்

16. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர் _____
அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா ஆ) அல்போன்ஸா டி அல்புகர்க்
இ) நினோ டா குன்கா ஈ) ஆன்டோனியா டி நாரன்கா

17. சென்னை பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு _____
அ) 1837 ஆ) 1861 இ) 1844 ஈ) 1857

18. பாளையக்காரர் முறை முதன் முதலில் _____ பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.
அ) விஜயநகர் ஆ) பாமனி இ) காகதிய ஈ) ஹொய்சால

19. "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" _____ ஆவார்.
அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) இராஜா ராம் மோகன்ராய் ஈ) ஆத்மராம் பாண்டுரங்

20. சிவாஜி சூரத் நகரை தாக்கிய ஆண்டு _____
அ) 1661 ஆ) 1662 இ) 1663 ஈ) 1664

பகுதி – II

II ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 30 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும். 7x2=14

21. பெருங்குளம் சிறு குறிப்பு வரைக.
22. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
23. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
24. மதுரா குறித்து பாகியான் குறிப்பிடுவதை சுருக்கமாக எழுதுக?
25. தமிழ்ச் சங்கம் குறித்து எழுதுக.
26. தராப் பற்றி எழுதுக.
27. ஔரங்கசீப்பிற்கு எதிராக வட பகுதியில் மூண்ட மூன்று எழுச்சிகள் யாவை?
28. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி சுருக்கமாக எழுதுக.
29. வராகன் (பகோடா) என்றால் என்ன?
30. இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவதென்ன?

பகுதி – III

III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 40 வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும். 7x3=21

31. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.
32. மேய்ச்சர் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
33. கங்கை சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்திற்கான காரணங்கள் யாவை?
34. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?
35. சங்க காலத்தின் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.
36. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது" எவ்வாறு?
37. பல்லவர்களின் நிர்வாகப்பிரிவுகள்.
38. தென்னிந்தியாவின் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
39. காரன்வாலிஸின் நீதித்துறை நிர்வாகம்.
40. 1806 ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக.

பகுதி – IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7x5=35

41. அ) கீழ் மற்றும் இடைப் பழங்கற்காலப் பண்பாடுகளை ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேத கால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை காட்டுக.

42. அ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றி கூறுக.

(அல்லது)

ஆ) களப்பிரர் என்போர் யார் ? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன ?

43. அ) கலைக்கும் இலக்கியத்துக்கு மான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழி வகுத்தது ?

44. அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) கஜினி முகமதுவையும், கோரி முகமதுவையும் ஒப்பிட்டு வேறுபடுத்தியும் காட்டுக.

45. அ) விஜய நகரப் பேரரசின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை விவரி.

(அல்லது)

ஆ) நவீன கல்விக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

46. அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள் வரிசைப்படுத்துக ?

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.

1) குஜராத் 2) மாளவம் 3) காஷ்மீர் 4) அஜ்மீர் 5) பீஜப்பூர்

47. அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி ?

(அல்லது)

ஆ) கர்நாடகப் போரின் போது ஏற்பட்ட நிகழ்வுகள் ஏதேனும் 5 எழுதுக.

/

QUESTION PAPERS

GET PREVIOUS YEAR QUESTION PAPERS FOR ALL CLASSES FOR CBSE, ISCSE, ISC AND ALL ALL STATE BOARDS HERE AT AGLASEM.COM

BOARD WISE

- Andhra Pradesh Board Question Papers
- Assam Board Question Papers
- Bihar Board Question Papers
- Chhattisgarh Board Question Papers
- Goa Board Question Papers
- Gujarat Board Question Papers
- Haryana Board Question Papers
- Himachal Pradesh Board Question Papers
- J&K State Board Question Papers
- Jharkhand Board Question Papers
- Karnataka Board Question Papers
- Kerala Board Question Papers
- Madhya Pradesh Board Question Papers
- Maharashtra State Board Question Papers
- Manipur Board Question Papers
- Meghalaya Board Question Papers
- Mizoram Board Question Papers
- Nagaland Board Question Papers
- Orissa Board Question Papers
- Punjab Board Question Papers
- Rajasthan Board Question Papers
- Tamil Nadu Board Question Papers
- Telangana State Board Question Papers
- Tripura Board Question Papers
- Uttarakhand Board Question Papers
- Uttar Pradesh (UP) Board Question Papers
- West Bengal (WB) Board Question Papers